திரு. ஆ. பரந்தாமன்: டாக்டர் அம்பேத்கார் பெயரில் அமைக்கப்படுகிற இந்தக் கல்லூரி ஆண்களுக்கா? அல்லது பெண்களுக்கா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது ஆண்களுக்கு.

திரு. என். டென்னிஸ்: சட்ட வல்லுநரான டாக்டர் அம்பேத்கார் பெயரில் மதுரையில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது அது பற்றிய செயற்குறிப்பு இல்லை.

டாக்டர் அம்பேத்காரின் நூல்கள்

*283 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்திட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. செ. கந்தப்பன்: தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்திய நாட்டில் ஒரு தனி சிந்தனைக்குச் சொந்தக்காரர் என்று போற்றப் படுபவர் ஆவார். எனவே, அவருடைய சிந்தனைக் கருவூலத்தைத் தமிழில் வெளியிடும் வகையில் முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இம்மாதிரி சிறந்த நூல்களை வெளியிடுகிறவர்களை ஊக்குவிப்பதற்காக நிதி உதவி அளிக்கும் திட்டமொன்று நடைமுறையில் இருக்கிறது. அதற்கான வல்லுநர் குழுவும் இருக்கிறது. யாரேனும் அம்மாதிரி நூல்களை மொழி பெயர்க்க முன்வந்தால் அந்த நூல்களை ஆராய்ந்து நிதி உதவி செய்ய வேண்டும் என்ற கருத்து தெரிவித்தால் அதன் மீது அளிக்கலாம். அந்த முயற்சியினை தனிப்பட்டவர்கள் மேற்கொள்ளலாம்.

ஊராட்சி ஒன்றிய ஜீப்புகள்

*284 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி பணிகளை கவனிப்ப தற்கென மாதத்தில் 4 நாட்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் ஜீப்பினை ஒதுக்கி கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையி லுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.